1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொழு நோய் பிடித்தவர்களில் வசதி படைத்தவர்களும் உண்டு. அவர்கள் வீட்டுக்குள்ளேயே தேவையான வசதிகளைப் பெற்றுக்கொண்டு சிகிச்சையும் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த நோயை வெளியே காட்டினால்தான் மக்கள் நம்மீது அக்கறை காட்டுவார்கள் என்ற மனப்பான்மையில் தெருக்களில் பிச்சைக்காரர்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவேண்டும், மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சென்ற ஆண்டு முதல்வர் கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் பிறந்த தினத்தை ஒட்டி சில இடங்களில் இவர்களுக்கான மறுவாழ்வு விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அங்கத்தினர் திரு. ராஜகோபால் போன்றவர்கள் அப்படிப்பட்ட பிச்சைக் காரர்களைக் கண்டால், அப்படியே ஓட விட்டு விடாமல் பிடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Air Pollution

*88. Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state the action proposed to be taken by the Government in removing the air pollution in Basin Bridge area of Madras City?

காற்றின் தூய்மை கெடுதல்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் பேசின் பிரிட்ஜ் பகுதியில் காற்றின் தூய்மை கெடுவதை நீக்குவதற்காக அரசு எடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் காற்றின் தூய்மை கெடுதலைத் தவிர்க்க எடுக்க வேண்டிய பலவகைப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கருத்து தெரிவிக்க வேண்டி அரசு ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் அறிக்கை வரப்பெற்றுள்ளது. அவ்வறிக்கையில் பேசின் பிரிட்ஜ் வட்டாரத்திலும் பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திலும் உள்ள தொடர் வண்டி நீராவி இயந்திரம் பற்றிய பரிவுரையிலும் உள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1972 ஆகஸ்ட் 19

* 89. *Q.*—Thiru SAW. GANESAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a symposium on air pollution organised by the Public Health Department of the Guindy Engineering College was recently held in Madras; and

(*b*) if so, the nature of the findings and the suggestions offered?

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் சென்னை, கிண்டி பொறியியல் கல்லூரியின் பொதுச் சுகாதாரத் துறையால் காற்றின் தூய்மை கெடுதல் குறித்த உரையரங்கு ஒன்று, ஏற்பாடு செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அக்கருத்தரங்கில் கண்டறியப் பட்ட, எடுத்துரைக்கப்பட்ட கருத்துரைகளின் தன்மை யாது ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கிண்டி, பொறியியல் கல்லூரியில், மக்கள் நல்வாழ்வுத் துறையால் கட்டப்பட்ட கருத்தரங்கில், கீழ்க்காணும் பொதுப் பரிவுரைகள் செய்யப்பட்டன—

(1) நாடு முழுவதுமுள்ள முக்கியத் தொழில் இடங்களிலும், பெரிய நகரங்களிலும், காற்று வசதிப் பெருக்க நிலையங்களை (Air Monitoring Stations) நிறுவவேண்டும் ;

(2) சுத்தக் காற்றைப் பெறுவதற்கு காற்று அசுத்தப் படுத்தப்படுவதைத் கட்டுப்படுத்துவதற்கும் நிலையங்களை அமைப் பதற்கு, போதிய சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் ;

(3) காற்று அசுத்தப்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த பயன் தரத்தக்க நடவடிக்கைகளைத் தெரிவிப்பதற்கு தொழில் துறை அதிகாரிகளுக்கும் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரி களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும் ;

1972 ஆகஸ்ட் 19]

(4) காற்று அசுத்தப்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவைப்படும் உள்நாட்டுச் சாதனங்களைத் தயாரிப்பதற்கும், அவற்றை அமைப்பதற்கும், தொழிற்சாலைகளுக்கும், காற்று அசுத்தப்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்யும் நிறுவனங்களுக்கும், தேவையான உதவிகளை, மத்திய அரசும், மாநில அரசும் வழங்கவேண்டும் ;

(5) புள்ளி விவரங்களைத் தொகுத்துச் சேகரிப்பதற்கும், மனிதர்கள், கால்நடைகள், தாவரங்கள், பொருட்கள் ஆகியவற்றின்மீது காற்று அசுத்தப்படுவதனால் ஏற்படும் விளைவு குறித்து ஆராய்வதற்கும், மத்திய அதிகாரமன்றம் ஒன்றை நிறுவ வேண்டும்.

Sheep Breeding Farm

* 90 *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a Centrally sponsored Sheep Breeding Farm in the State; and

(*b*) if so, the details of the same?

செம்மறி ஆடு இனப்பெருக்கப் பண்ணை

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், மத்திய அரசால் தொடங்கப்படும் செம்மறி ஆடு இனப்பெருக்கப் பண்ணை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) செம்மறி ஆட்டுப் பண்ணை ஒன்றை உதக மண்டலத்தில் பெரிய அளவில் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இது மத்திய அரசு தொடங்கும் திட்டமாகும். இப்பண்ணைதானகவே 6,000 முதல் 7,000 செம்மறியாடுகள் வரை வளர்க்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். இதற்காக கிடைக்கக்